முயற்சி என்பது
விதை போல...
அதை விதைத்துக்
கொண்டே இரு...
முளைத்தால் மரம்.....
இல்லையென்றால் - அது
மண்ணிற்கு உரம்...

கோ.நம்மாழ்வார்




தொழிநுட்ப ஆலோசனைகள் :
பிராந்திய விவசாய ஆராய்ச்சி & அபிவிருத்தி நிலையம்
கிளிநொச்சி

adt
Alliance Development Trust

RARDC KILINOCHCHI

barnabasfund

# ஆலோசகரிடமிருந்து ஓர் அறிமுகம்



கண்ணுக்குத்தெரியாத எதிரியுடன் போராடிக்கொண்டிருக்கும் காலமிது இதைவிட காலநிலைமாற்றம் சுற்றாடல் மாசடைதல் உணவுகள் நஞ்சாதல் போன்ற இன்னோரன்ன சவால்களை விவசாயத்துறை எதிர்நோக்குகின்றது.

மேட்டுநில பயிர்ச்செய்கையிலும் தாழ்நில நெற்செய்கையிலும் தன்னிறவை எட்டுவது பெரும் சவாலாக உள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டு விவசாயத் திணைக்களத்தினரால் "சௌபாக்கியா" எனும் வீட்டுத்தோட்ட முன்மாதிரித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ் வீட்டுத்தோட்ட செயற்பாடானது ஒவ்வோர் குடும்பமும் குடும்பமட்டத்தில் பயிர்களின் தேவைகளிற்கான தன்னிறைவை அடைவது மட்டுமல்லாது மிதமிஞ்சிய உற்பத்தியின் மூலமாக குடும்ப பொருளாதாரத்தில் உயர்நிலையை எட்டுவதற்கு வழிசமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் **"பலன்"** எனும் இவ்வீட்டுத்தோட்டத்தை முன்னெடுக்கும் இத்திட்டமும் அரசமுன்னெடுப்பிற்கு உறுதுணையாக அமையும்.

மரக்கறிகள், பழவகைகள் இச்செய்கையில் முக்கியபங்கு வகிப்பதோடு எதிர்கால விதைத்தேவையை ஈட்டித்தருவதற்குமாக ஓர் அலகாக இச்செயற்திட்டத்தை முன்னெடுப்பது அத்தியவசியமானதாகும். வீட்டுத்தோட்டம் எனும் தொனிப்பொருளில் எமது வீட்டில் கழிவாக கிடைக்கும் அநேக மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்களை பயன்படுத்தி அசேதனப்பசளைகள், கிருமிநாசினிகளை விடுத்து சூழலுக்கு இசைவான சேதன வீட்டுத்தோட்டத்தை நிர்மாணிப்பது சாலச்சிறந்தது.

இச்செய்கையில் வீட்டுத்தோட்டத்துண்டம் இயற்கைப்பசளைகள் தயாரிப்பு, இயற்கைக்கிருமிநாசினிகள் தயாரித்தலும் பாவித்தலும், பாதுகாப்பு காற்றுத்தடைகள், இயற்கையாக நன்மைதரும் உயிரினங்களை கவரும் பயிர்கள், அலங்காரபயிர்கள் என்பவற்றை ஒவ்வோர் அலகாக ஈடுபடுத்துவது சமகாலத்தேவையாகும்.



சேதன வீட்டுத்தோட்டசெய்கையானது மனிதனை இரசாயன தீங்குகளில் இருந்து விடுபட்டுக்கொள்வதற்கும் ஓர் உளஓய்வை ஏற்படுத்தி உடல் ஆரோக்கியத்தை பேணுவதற்கும் செலவீனங்களில் ஏற்படும் மேலதிக செலவை குறைப்பதற்கும் வீட்டுச்சுற்றுப்புறச்சூழலை பாதுகாப்பாகவும் அழகாகவும் பேணுவதற்கு ஓர் சந்தர்ப்பத்தை எமக்கு தருகின்றது.


தற்கால அசாதாரண சூழ்நிலை இச்செய்கையை முன்னெடுப்பதற்கு எல்லோராலும் பரிந்துரைக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டாலும் இது ஒவ்வோர் வீட்டிலும் ஓர் அலகாக இருக்கவேண்டியதை **"பலன் திட்டம்"** வலியுறுத்தி நிற்கின்றது. ஆதலால் எமக்கு உதவிடும் இவ் உந்துசக்தியை ஓர் சாதகமாக பயன்படுத்தி வீட்டுத்தோட்ட செய்கையை ஒவ்வோர் வீட்டிலும் தொடர்ந்து நிலைபெற செய்வதற்கு உறுதிபூணுவோம்.

" பஞ்சத்தை ஒழிக்கும் இப்பசுமைத்திட்டத்தில் பங்கெடுத்து பயன்பெறுவோம்"

ஆலோசகர் : கலாநிதி.சி.ஜே.அரசகேசரி,
மேலதிகப்பணிப்பாளர் (ஆராய்ச்சி)
பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,
கிளிநொச்சி.

சில விதை நல்ல நிலத்தில் விழுந்து ஓங்கிவளருகிற பயிராகி,
ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாக
**பலன்** தந்தது.
– திருவிவிலியம்

# மாதிரி வீட்டுத்தோட்டம்




# வீட்டுத்தோட்டத்தில் கவனிக்க வேண்டியவை

- மொட்டை மாடியில் அமைக்கும் போது நீர் போகும் வழிகளை அடைக்காமல் அமைக்கவும்
- கைப்பிடி சுவரோடு ஒட்டி அமைத்து விடாமல் நான்கு புறமும் சென்று வர வழியோடு அமைக்கவும்
- குறைந்த இடத்தில் அமைக்கிறோம் நிறையப்பயிரிடவேண்டும் என அதிகம் செடிகளை நட்டாமல் போதுமான இடைவெளி விடவும் அடர்த்தி அதிகம் ஆனால் செடிகளிடையே ஊட்டச்சத்துக்கு போட்டி ஏற்பட்டு எதுவுமே சரியாக வளராது.
- நீர் தேங்காமலும் பானைகள் நீருடன் திறந்து கிடக்காமலும் பார்த்துக்கொள்ளவும் இல்லையெனில் நுளம்புப்பெருக்கம் ஏற்படலாம்.
- மேலும் சில பூச்சிகள், வண்டுகள் உங்கள் வீட்டுக்கு அழையா விருந்தாளியாக வரலாம். கட்டுப்படுத்த வேப்பம் எண்ணையை நீரில் கலந்து கை தெளிப்பான் மூலம் தெளிக்கலாம்.
- தோட்டத்தில் பல்லி,சிலந்தி போன்ற பூச்சி இனங்களை அப்புறப்படுத்தக்கூடாது அவை பயிர்களின் நண்பனே.
- ஒரே வகையான காய்கறிகளை தொடர்ந்து பயிர் செய்வதை தவிர்க்க வேண்டும் அந்தக்காய்கறிகள் தொடர்ந்து தேவைப்படும் என்றாலும் அவை நல்ல விளைச்சலை கொடுத்து அழியும் சந்தர்ப்பத்தில் இருக்கும் போது வேறு இடத்தில் அவற்றை நடுகை செய்யவேண்டும். இல்லையென்றால் அம் மண் சத்-துக்களை இழந்து விடும்.
- காய்கறிகளை மாற்றி மாற்றி பயிர் செய்வதில் மற்றொரு நன்மையும் இருக்கிறது. செடிகளின் மீது பூச்சிகள் ஆக்கிரமிப்பது தவிர்க்கப்படும். ஒரே வகையான செடிகளை பூச்சிகள் விரும்பி சேதப்படுத்துவது தவிர்க்கப்படும்.
- வீட்டு செடிகளை பூச்சிகள் சேதப்படுத்தினால் அதற்கு செயற்கை பூச்சிகொல்லி மருந்துகளை உபயோகிப்பதை தவிர்க்கவேண்டும்.



- கோடை காலத்தில் வெயிலின் ஆதிக்கம் செடிகளின் வளர்ச்சிக்கு தடையாக அமைந்து விடக்கூடாது அதற்து தேவையான முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும் குடில்கள் அமைத்து சூரிய ஒளி மிகமாக பரவுமாறு செய்யலாம் சீரான இடைவெளியில் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவது அவசியம்.
- இயற்கை விவசாயத்தில் இயற்கை உரங்கள் கீளைகொள்ளிகளை பயன்படுத்த வேண்டும் இயற்கை உரங்களை வீட்டிலேயே தயார் செய்து செடிகளுக்கு பயன்படுத்துவது கூடுதல் நன்மை பயக்கும்

# வீட்டுத்தோட்ட பயிர்செய்கை மூலம் உங்களுக்கு கிடைக்கும் பயன்கள்

## பொருளாதார ரீதியான பயன்கள்

வீட்டுத்தோட்டம் செய்வதனால் உங்களது நாளாந்த தேவைகளுக்காக காய்கறிகள் மற்றும் பழ வர்க்கத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். இது உங்கள் பணத்தையும் காலத்தையும் மீதப்படுத்தும்.

## சுகாதார நன்மைகள்

இரசாயன மருந்து ஊட்டப்படாத காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் நிறைந்த வீட்டுத்தோட்டம் ஒன்றை நிர்மாணித்துக் கொள்ளக்கூடிய அதே வேளை புதிய வகை காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்களை உட்கொள்ளுதல் ஆரோக்கியமிக்க வாழ்வொன்றுக்கு வழிவகுக்கும்.

## சூழல் ரீதியான பயன்கள்

வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையானது சூழலை பாதுகாத்துக்கொள்ள உதவுவதுடன் உங்கள் வீட்டுத்தோட்டத்தில் கொம்போஸ்ட் பெரல் (Barrel) ஒன்றை வைத்துக் கொள்வதன் மூலம் உங்களுக்குத் தேவையான குப்பைகூழ முகாமைத்துவத்திற்கும் பங்களிப்பு செய்ய முடியும்.

## ஆத்ம திருப்தி

உங்கள் வீட்டுத்தோட்டத்தில் வளரும் செடிகள், பூக்கும் மலர் மற்றும் விளையும் கனிகள் ஆகியவற்றை காண்பதன் மூலம் உங்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஒன்றை தருவதுடன் அது மன அழுத்தத்தைக் குறைத்துக்கொள்வதற்கும் வழிவகுக்கின்றது. அதனோடு தொற்றா நோய்களையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

## அழகான சுற்றுச் சூழல்

அழகானதொரு வீட்டுத்தோட்டமானது வீட்டுச் சுற்றுச் சூழலை மேலும் அழகுபடுத்தும்.

## குடும்ப பொழுதுபோக்கு

குடும்ப பொழுதுபோக்குக்காக வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைகளை பயன்படுத்திக்கொள்ளக் கூடிய அதே வேளை அதனூடாக குடும்ப ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ளாம்.

# வெண்டி


## Okra



### நிலம் பண்படுத்தல்

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30ச.மீ x 30ச.மீ ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 4-5 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப்பசளை 3-4 கைப்பிடிகள் சேர்த்து மண்ணுடன் கலந்து குழிகளுக்கு இடவும். இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை பூவாளி மூலம் நீர் தெளித்து குளிகளை நன்கு நனைக்கவும்.

### நடுகை




### விதை / நாற்று நடல்

ஒரு குழியில் 2-3 ச.மீ ஆழத்திற்கு விதையினை 3-4 வரை இடவும் விதைமுளைத்து 2 கிழைமைகளில் ஒரு குழிக்கு 2 கன்றினை இட்டு மேலதிக கன்றுகளை அகற்றல் வேண்டும்.

### பசளையிடல்

வளரும் பருவத்தில் அதாவது 4 – 7 வாரத்தில் சேதனப்பசளைகளாக மாட்டெரு, கூட்டெருவை பயன்படுத்தலாம்.

### நோய் பீடை கட்டுப்பாடு

வேப்பமிலைக்கரைசல், ஐந்திலைக்கரைசல், 3G கரைசல் போன்றவற்றை இயற்கை பூச்சி, பீடை விரட்டியாகவும் திரவப்பசளையாகவும் பயன்படுத்தமுடியும்.

### பயிர் பராமரிப்பு நடவடிக்கை

அறுவடையை பெற்ற பின் அதன் கீழுள்ள இலைகளை அகற்றவும்

### அறுவடை

2 மாதங்களில் முதல் அறுவடையினைப் பெறமுடியும்.
இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யவும்

### விசேடித்த நன்மை

கல்சியம், அயடீன், விட்டமின் C அதிகமுள்ள மரக்கறி மற்றும் கூடிய நார்சத்து



# சிறகவரை


## Wing bean



### நிலம் பண்படுத்தல்

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30ச.மீ x 30ச.மீ ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 4 – 5 முன்னர் நன்கு உக்கிய சேதனப்பசளை 3-4 கைப்பிடிகள் மண்ணுடன் சேர்த்து கலந்து குழிகளுக்கு இடவும். இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை பூவாளி மூலம் நீர் தெளித்து குளிகளை நன்கு நனைக்கவும்

### நடுகை




### விதை / நாற்று நடல்

நடுகையின் முன் விதைகளை 24 மணிநேரம் நீரில் ஊரவிடல். 2-3 ச.மீ ஆழத்தில் விதையிடல். நாற்றுக்களாயின் அவற்றினை பிடுங்கி நடுகை செய்யாது மண்ணுடனே சேர்த்து நடுகை செய்தல் வேண்டும்.

### பசளையிடல்

வளரும் பருவத்தில் அதாவது 2 - 3 வாரத்தில் சேதனப்பசளைகளாக மாட்டெரு, கூட்டெரு, கோழி எச்சம் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

### நோய் பீடை கட்டுப்பாடு

வேப்பமிலை, வேப்பம் நாற்று கரைசல், ஐந்திலை கரைசல், 3G கரைசல் போன்றவற்றை பூச்சி, பீடை கொல்லியாகவும் இயற்கை திரவ பசளையாகவும் பயன்படுத்தலாம்.

### பயிர் பராமரிப்பு நடவடிக்கை

எல்லாக்கொடிகளையும் ஆதாரத்தில் படரவிடவும். கொடிக்கு 2மீற்றர் உயரமான கம்பை நட்டு அவற்றிற்கிடையில் வேலிமுறையில் கயிற்றைக்கட்டவும் அதில் கொடியை படரவிடவும்.

### அறுவடை

90 நாட்களின் பின் அறுவடையை பெற ஆரம்பிக்கலாம்.

### விசேடித்த நன்மை

புரதம், விட்டமின் C மற்றும் நார் பொருள் அதிகமான மரக்கறி

# பயிற்றை

## Long bean




### நிலம் பண்படுத்தல்

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30ச.மீ x 30ச.மீ ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 4 – 5 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய மாட்டெரு / கூட்டெரு சேதனப்பசளை 3-4 கைப்பிடிகள் மண்ணுடன் சேர்த்து கலந்து குழிகளுக்கு இடவும். இரண்டு நாட்களுக்கு ஒரு தடைவ பூவாளி மூலம் நீர் தெளித்து குளிகளை நன்கு நனைக்கவும்.

ச.மீ : சதம மீற்றர் (cm)

### நடுகை




### விதை / நாற்று நடல்

ஒரு குழிக்குள் 1-2 விதையினை இடவும்

### பசளையிடல்

மாட்டெரு, கூட்டெரு, கோழிஎரு போன்றவை சேதனப்பசளைகளா பயன்படுத்த முடியும்

### நோய் பீடை கட்டுப்பாடு

வேப்பமிலைக் கரைசல், வேப்பம் விதைக் கரைசல், ஐந்திலை கரைசல், 3G கரைசல் போன்றவற்றை திரவப்பசளைகளாகவும் பூச்சி பீடை விரட்டியாகவும் பயன்படுத்தலாம்.

### பயிர் பராமரிப்பு நடவடிக்கை

எல்லா பயிற்றங்கொடிகளையும் ஆதாரத்தில் படர விடவும். 2 மீற்றர் உயரமான கம்பை நட்டு அவற்றுக்கிடையில் வேலி முறையில் கயிற்றினை கட்டி படர விடவும்.

### அறுவடை

45-50 நாட்களின் பின் முதலாவது அறுவடையை பெறமுடியும்.

### விசேடித்த நன்மை

பாரம்பரிய மருத்துவத்தில் பல பயன்பாடுகளில் நீண்டகாலமாக ஆரோக்கியமான உணவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.



# வட்டுக்கத்தரிக்காய்

## Elabadu




### நிலம் பண்படுத்தல்

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30ச.மீ x 30ச.மீ ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 4 – 5 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய மாட்டெரு / கூட்டெரு சேதனப்பசளை 3-4 கைப்பிடிகள் மண்ணுடன் சேர்த்து கலந்து குழிகளுக்கு இடவும். இரண்டு நாட்களுக்கு ஒரு தடைவ பூவாளி மூலம் நீர் தெளித்து குளிகளை நன்கு நனைக்கவும்.

ச.மீ : சதம மீற்றர் (cm)

### நடுகை




### விதை / நாற்று நடல்

நாற்று மேடையில் விதைகளை இட்டு 21 நாட்கள் வளர்ந்த நாற்றினை குழிகளில் நாட்டப்படும். வேர் நன்கு மண்ணில் புதையும் வண்ணம் நடல்.

### பசளையிடல்

மாட்டெரு, கூட்டெரு, கோழிஎரு போன்றவை சேதனப்பசளைகளாக பயன்படுத்த முடியும்

### நோய் பீடை கட்டுப்பாடு

வேப்பமிலைக் கரைசல், வேப்பம் விதைக் கரைசல், ஐந்திலை கரைசல், 3G கரைசல் போன்றவற்றை திரவப்பசளைகளாகவும் பூச்சி பீடை விரட்டியாகவும் பயன்படுத்தலாம்.

### அறுவடை

75 – 80 நாட்களில் முதலாவது அறுவடையினைப் பெற முடியும்.

### விசேடித்த நன்மை

இது குறைந்த கலோரி கொண்ட காய்கறி மற்றும் விட்டமீன் A மற்றும் C ஆகியவற்றின் நல்ல மூலமாகும்.

# கெக்கரிக்காய்

## Cucumber




### நிலம் பண்படுத்தல்

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30ச.மீ X 30ச.மீ ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 4 – 5 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய மாட்டெரு / கூட்டெரு சேதனப்பசளை 3-4 கைப்பிடிகள் மண்ணுடன் சேர்த்து கலந்து குழிகளுக்கு இடவும். இரண்டு நாட்களுக்கு ஒரு தடைவ பூவாளி மூலம் நீர் தெளித்து குளிகளை நன்கு நனைக்கவும்.

ச.மீ : சதம மீற்றர் (cm)

### நடுகை




### விதை / நாற்று நடல்

ஓர் குழியினுள் 1 – 2 விதைகள் இடப்படும்.

### பசளையிடல்

மாட்டெரு, கூட்டெரு, கோழிஎரு போன்றவை சேதனப்பசளைகளாக பயன்படுத்த முடியும்

### நோய் பீடை கட்டுப்பாடு

வேப்பமிலைக் கரைசல், வேப்பம் விதைக் கரைசல், ஐந்திலை கரைசல், 3G கரைசல் போன்றவற்றை திரவப்பசளைகளாகவும் பூச்சி பீடை விரட்டியாகவும் பயன்படுத்தலாம்.

### பயிர் பராமரிப்பு நடவடிக்கை

கொடிகளை ஆதாரத்தில் படரவிடும்படி கொடிக்கு 2 மீற்றர் உயரமான கம்பை நட்டு அவற்றிற்கிடையில் வேலி முறையில் கயிற்றைக்கட்டி கொடியை படரவிட வேண்டும்.

### அறுவடை

75 – 80 நாட்களில் முதலாவது அறுவடையினைப் பெற முடியும்.

### விசேடித்த நன்மை

விட்டமின் K, விட்டமின் C, மெக்னீசியம், பொட்டாசியம், மாங்கனீசு மற்றும் விட்டமின் A என்பவற்றை வழங்குகிறது.



# கீரை

## Amaranthus



### நிலம் பண்படுத்தல்

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி பாத்திகளினை எமக்கு ஏற்ற வகையில் அமைத்து ஒரு சதுர மீற்றர் பாத்திக்கு குறைந்தளவு 1kg சேதனப் பசளையினை இட்டு கலந்து விடுதல்.

### விதை / நாற்று நடல்

கீரை விதைகளை மணலுடன் சேர்த்து சீராக பாத்தியினுள் பரவும்படி விசிறுதல் வேண்டும்.

### பசளையிடல்

மாட்டெரு, ஆட்டெரு மற்றும் கூட்டெரு போன்றவை சேதனப்பசளைகளாக பயன்படுத்துவது விளைச்சளை அதிகரிக்கும்.

### நோய் பீடை கட்டுப்பாடு

இயற்கை பூச்சி பீடைகொல்லிகளை வெப்பம் நாற்றுக்கரைசல், 3G கரைசல் என்பவற்றை திரவப்பசளை பிரயோகத்திற்காகவும் பயன்படுத்தமுடியும்.

### பயிர் பராமரிப்பு நடவடிக்கை

நன்றாக வளர போதுமான நீர் வழங்கவேண்டும்.

### அறுவடை

20 – 25 நாட்களில் முதலாவது அறுவடையினைப் பெற முடியும்.

### விசேடித்த நன்மை

இந்த உணவு நிறைவுற்ற கொழுப்பில் குறைவாகவும், கொழுப்பில் மிகக் குறைவாகவும் உள்ளது. இது நியாசினின் ஒரு நல்ல மூலமாகும், மேலும் புரதம், விட்டமின் A, விட்டமின் C, ரிபோஃப்ளேவின், விட்டமின் B6, ஃபோலேட், கல்சியம், இரும்பு, மெக்னீசியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், துத்தநாகம், தாமிரம் மற்றும் மாங்கனீசு ஆகியவற்றின் நல்ல மூலமாகும்.